**MCOP.No.77/2021 P.W.2-குமரேசன் 21.01.2026**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பானை வரவில்லை. இந்த விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இன்றைக்கு மனுதாரர் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இன்றைக்கு மனுதாரரும் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். எனது முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை சாட்சியத்தில், கன்டைனர் லாரி சாலையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்பட்டிருந்தால் அது தவறு. நான் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்க்காமல் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். இறந்துபோன நபருக்கு தலையில் பலத்த காயமும், இரண்டு கால் முட்டிகளிலும் காயம் ஏற்பட்டது. நான் பார்த்தபோது அந்த நபர் இறந்துபோயிருந்தார். சத்தம் கேட்டு நான் 2 நிமிடத்தில் அங்கு போய் பார்த்தபோதே அவர் இறந்து தான் இருந்தார். இறந்து கிடந்த நபரின் அருகே தலைகவசம் எதுவும் பார்க்கவில்லை. இறந்த நபர் எனக்கு அண்ணன் முறையாவார். போலீசாரால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையில் என்னை கண்ணுற்ற சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர்கள் எனது உறவினர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை